மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சென்னை, மதுரை ஆகிய இடங்களில் அரசு இசைக் கல்லூரிகள் இருக்கின்றன. கோவையிலே ஓர் இசைக் கல்லூரியை, நீலகிரி மாவட்டத்தின் தேவையையும் பூர்த்தி செய்யும் அளவுக்கு நிறுவ அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

468—(*வினா எண். 12027) திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் தொகுதி திருவாவடுதுறையில் வித்வான் இராஜரத்தினம் பிள்ளை நினைவாக இசைக் கல்லூரி ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு தமிழகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிற பல்வேறு இசைக் கலைஞர்களைப் பாராட்டி அவர்களுக்கு வேண்டிய உதவிகளை எல்லாம் செய்து வருகிறது. அதுபோல வாழ்ந்து மறைந்து போன இசைக் கலைஞர்களையும் பாராட்டி வருகிறது. அதுபோல தஞ்சை மாவட்டத்திலுள்ள குற்றாலம் தொகுதியைச் சேர்ந்த திருவாவடுதுறையில் வாழ்ந்து மறைந்த நாதஸ்வர வித்வான் பெரியவர் ராஜரத்தினம் பிள்ளை அவர்கள் பெயரில் ஓர் இசைக் கல்லூரியை தொடங்குவது பற்றி பரிசீலிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கையை பொறுத்துதான் அரசு நடவடிக்கை எடுக்க முடியும். ஏற்கெனவே சென்னையில் ஒன்றும், மதுரையில் ஒன்றும், ஆக இரண்டு அரசு இசைக் கல்லூரிகள் இருக்கின்றன. கோவையிலே மட்டும் இன்னொரு இசைக் கல்லூரியை நிறுவுகின்ற செயற்குறிப்பு அரசிடம் உள்ளது.

திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலுள்ள சுவாமிமலையில் இருக்கின்ற நாதஸ்வர இசைக் கல்லூரியில் எத்தனை மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள்? அதனை விரிவுபடுத்துகின்ற திட்டம் அரசிடம் உள்ளதா?

1987 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமாக இரண்டு இசைக் கல்லூரிகளையும் எடுத்துக் கொண்டால் சென்னையில் 808 மாணவ மாணவியரும், மதுரையில் 69 மாணவ மாணவியரும், ஆக மொத்தத்தில் 877 மாணவ மாணவியர்கள் பயிற்சி பெறுகிறார்கள்.

தமிழகத்தில் அரசுப் பள்ளிகளுக்கு தொலைக்காட்சிப் பெட்டி வழங்கல்.

469—(*வினா எண் 12559) திரு. த. புஷ்பராஜ் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளி, உயர் நிலைப்பள்ளிகளுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): தொலைக்காட்சி நிலையத்தின் எல்லைக்குட்பட்ட மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகள் பெற்றோர்—ஆசிரியர் சங்கத்தின் உதவியால் அங்கீகரிக்கப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டிகளை வாங்கிக்கொள்ள அரசு ஏற்கெனவே அனுமதி அளித்துள்ளது.

(முற்பகல் 10-50)

திரு. த. புஷ்பராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு பெற்றோர்—ஆசிரியர் சங்கத்தின் மூலமாக தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படுகின்றன என்று இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒரு சில ஊர்களில் இருக்கின்ற உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல் நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் அங்கேயிருக்கின்ற பெற்றோர்—ஆசிரியர் சங்கங்களில் போதிய அளவு பொருளாதார வசதி இல்லை. ஆகவே, அந்த வசதியைப் பெற முடியாத சூழ்நிலையிலே அந்த மாணவர்கள் இருக்கிறார்கள். இதைக் கருத்திலேகொண்டு அரசு தொலைக்காட்சி பெட்டியை வாங்கிக் கொடுப்பதற்கு நடவடிக்கையை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.